**29.06.2022**
**OS 26/2019**
**வா.சா.1 ராதாகிருஷ்ணன்**
**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

பொது குடும்ப சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் 11 இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 11 இலக்க சொத்துக்களுகம் பொது குடும்ப சொத்துக்கள் என்று சொல்வதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வழக்கு சொத்திற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். ஆதியில் என் தகப்பனார் வழக்கு தாக்கல் செய்திருந்தார். அவர் இறந்தபிறகு நான் வழக்கை நடத்தி வருகிறேன். நான் 1/4 பங்கு கேட்டுள்ளேன். என் அப்பா, என் சித்தப்பா ஆசைதம்பி, 3வது சித்தபா பூமிராசு, 4வது அத்தை மீனாட்சி, 5வது அத்தை அனந்தம்மாள் ஆகியோர் முத்துகருப்பனுக்கு வாரிசுகள். தாவா சொத்து பொது குடும்ப சொத்துக்கள் என்று சொன்னால் அதில் எனது அத்தைக்களுக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் அத்தைகளுக்கு பாகம் ஒதுக்கி கோரவில்லை என்றால் இந்த வழக்குரையை எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ளார். ஆகையால் அந்த விவரம் எனக்குத் தெரியவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் பொது குடும்ப சொத்துக்கள் அல்ல என்றும், அவை என் தாத்தாவால் தனித்து கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாத்தா பெயரில் என் அப்பா ஆகியோர் சேர்ந்து வாங்கப்பட்ட சொத்துக்களாகும். தாவா 1வது இலக்க சொத்து எனது தாத்தாவால் கிரையம் வாங்கப்பட்ட சொத்துதான். 1ம் இலக்க சொத்து எனது தாத்தா பெயரில் கிரையம் வாங்கப்பட்டபோது எனது அப்பாவிற்கு வயது 18, எனது சித்தப்பாமார்களுக்கு முறையே வயது 16, 14 என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த கிரையம் வாங்கிய சமயத்தில் எனது அப்பாவை எனது தாத்தாதான் பராமரித்து வந்தார் என்று சொன்னால் இந்த வழக்கு என் தகப்பனார் போட்டதால் எனக்குத் தெரியாது. அந்த சமயத்தில் நான் பிறக்கவில்லை. எனது வழக்குரையில் எனது அப்பா மற்றும் சித்தாப்பாமார்களின் உடல் உழைப்பை கொண்டு தாவா சொத்துக்கள் தாத்தா பெயரில் வாங்கப்பட்டது என்று சொல்லப்பட்ட விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது. மாங்காய் குத்தகைக்கு எடுத்து வியாபாரம் செய்து வந்ததின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தாத்தாவின் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்று சொன்னால்

சரியல்ல. 4ம் பிரதிவாதி எனது மனைவி. 5ம் பிரதிவாதி எனது மகள். 4ம் பிரதிவாதி எனக்கு அத்தை மகள் ஆகவேண்டும். எனது தாத்தாதான் எனக்கும், 4ம் பிரதிவாதிக்கும் திருமணம் நடத்தி வைத்தார். திருமணம் நடந்து ஒரு வருடம் ஒன்றாக வசித்து வந்தோம். 1996ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனது மனைவி என்னை விட்டு 25 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வாழ்கிறார் என்றும், எனது மகள் 24 வருடமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றும் சொல்லியுள்ளது சரிதான். மேற்படி பிரிந்து வாழ்ந்து வருகின்ற எனது மனைவிக்கோ, மகளுக்கோ ஜீவனாம்சம் எதுவும் கொடுக்கவில்லை. அவர்கள் கேட்கவில்லை. எனது தாத்தா உயிருடன் இருந்த காலத்திலேயே 4,5 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலமும், 2,3 பிரதிவாதிகளுக்கு உயில் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பத்திரங்கள் எழுதி வைத்த விவரம் எனக்கு 2010ல் தெரியும் என்றால் எனக்கு 2011ல்தான் தெரியும். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் 4,5 பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டு தாவா சொத்திற்கான பட்டா, சிட்டா முதலிய ஆவணங்களை மாற்றிக் கொண்டுவிட்டனர் என்றால் 2018ல்தான் மாற்றிக்கொண்டுவிட்டனர். எனது தாத்தா 7.4.2015ல் இறந்த பின்னிட்டு 2,3 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த உயில் அமுலுக்கு வந்து, அதனடிப்படையில் 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்திற்கான பட்டா, சிட்டா முதலிய ஆவணங்களை மாற்றிக் கொண்டுவிட்டனர் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சொத்து எவ்வித பராமரிப்பும் இல்லாமல் அப்படியேதான் உள்ளது. எனது மகளுக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது. அந்த திருமணத்திற்கு என்னை கூப்பிடவில்லை. அதனால் போகவில்லை. எனது தாத்தா எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கட்டுப்பட்ட ஒரு சொத்தை விற்றுதான் 5ம் பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்றது என்றால் அதைப்பற்றி தெரியவில்லை. 2,3 பிரதிவாதிகளுக்கும் எனது அப்பாவிற்கும் எனது தாத்தா உயிருடன் இருந்த காலத்தில் 1980, 1984, 1986 ஆகிய வருடங்களில் சொத்தை தனித்தனியாக கிரையப் பத்திரம் வாங்கி வைத்துள்ளார் என்றால் அதை பற்றிய விவரம் எனக்கு சரியாக தெரியவில்லை. ஆனால் அவர்கள் பெயரில் சொத்து உள்ளது. எனது அப்பா பெயரில் உள்ள சொத்தை நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் எனது அம்மா பார்த்து வருகிறார். நாங்கள் மேற்பார்வை பார்த்து வருகிறோம். 3.10.2002ம் தேதி 1980, 1984, 1986 ஆகிய வருடங்களில் வாங்கிய சொத்தை பொறுத்து பாகப்பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி எனது அப்பா என்னிடம் சொல்லியுள்ளார். அவ்வாறு பாகப்பத்திரத்தில் எனது அப்பா பெயருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவருடைய காலத்திற்கு பின்னிட்டு நான்தான்

அனுபவித்து பராமரித்து வருகிறேன் என்றும், வழக்கிற்காக தற்போது என் அம்மாதான் அனுபவித்து வருகிறார் என்று மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. முத்துகருப்பணுக்கு பாத்தியப்பட்ட சுயசம்பாத்திய சொத்துக்களை பொறுத்து 2,3 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த உயில் மற்றும் 4,5 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் முதலியவற்றை செல்லாது என்று கோருவதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முத்துகருப்பணுக்கு பாத்தியப்பட்ட சுயசம்பாத்திய சொத்துக்கள் என்பதால் அதை பொறுத்து பாகம் கோருவதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்தில் பாகம் கோருவதற்கு உரிமையில்லை என்றும், எனது மனைவி மற்றும் மகள் மீதுள்ள விரோதம் காரணமாக நான் இந்த வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள எவ்வித பாக உரிமையும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுடியாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

6,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.